# ஆபேலும், காயீனும்

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்**

பொதுவாக ஞாயிறு பள்ளிகளில் ஆபேல் நன்மையானதை கொண்டு வந்தான். ஆகவே தேவன் அவன் காணிக்கையை அங்கீகரித்தார். காயீனோ கெட்டுப் போனதையும் அழுகினதையும் கொண்டு வந்தான். ஆகவே காயீனுடைய காணிக்கையை தேவன் அங்கீகரிக்கவில்லை என்று கற்றிருக்கலாம், அதுவே உங்கள் மனதிலும் ரீங்காரம் போட்டுக்கொண்டிருக்கலாம்...

காணிக்கை என்பது ஆராதனையின் ஒரு முக்கிய பகுதியாகும். ஆங்கீகரிக்கப்படாத காணிக்கையால் அல்லது ஆராதனையால் லாபம் ஒன்றும் இல்லையே! இன்றும் தேவனுக்கு செலுத்தப்படுகிற பெறும்பான்மையான காணிக்கை அங்கீகரிக்கப்படாமலேயே இருக்கிறது. சிலர் தங்கள் தலை மயிரை தருகிறார்கள், சிலர் தங்கள் எடைக்கு சமமாக பணத்தை அள்ளி இறைக்கிறார்கள். இன்னும் சிலர் தசமபாகங்களை கொண்டு வந்து தேவனுடைய பாதத்தில் படைக்கிறார்கள்... இன்னும் ஆடுகள், மாடுகள்... அடுக்கிகொண்டே போகலாம்....

ஆனால் .... இவைகள் அங்கீகரிக்கப்படுகின்றனவா? நம்மை உருவாக்கிய தேவனை லஞ்சம் கொடுத்து நம்முடைய கரத்தில் வைக்க முயல்வோமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக மாறிவிடுவோமே..

ஏன் தேவன் காயீனுடைய காணிக்கையை ஆங்கீகரிக்கவில்லை. ஆபேலுடைய காணிக்கையை அங்கீகரித்தார் என்று ஆதியாகமம் 4 ம் அதிகாரத்திலிருந்து பார்க்கப்போகிறோம்.

இரண்டுபேருமே தேவனை ஆராதிக்கவும் காணிக்கை செலுத்தவுமே வந்தார்களே அன்றி வேறு அல்ல. இந்த உலகத்தில் எல்லாருமே ஏதோ ஒரு வகையில் தேவனை ஆராதிக்கவும் காணிக்கை செலுத்தவும் வருகிறார்கள்... என்பது உண்மை

கர்த்தருக்கு காயீன் கொண்டு வந்த காணிக்கை நிச்சயமாக மோசமானதாக இருக்க வாய்ப்பு மிகவும் குறைவு. இந்த உலகத்தில் எத்தனை பேரோ ஆண்டவரை தேடாமல் இருக்கும் பொழுது இந்த காயீன் செய்தது மேலானதே...

## ஆபேல்

சரி ஏன் தேவனால் காயீனின் காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கேள்வி உங்களுக்கு இருக்கும். முதலாவது நாம் ஆபேலின் காணிக்கையை தேவன் ஏன் ஏற்றுக் கொண்டார் என்பதை பார்ப்போம். முதலில் ஒரு முக்கியான குறிப்பு ஒன்றை உங்கள் மனதில் பதிக்க விரும்புகிறேன்.

தேவன் <u>ஆபேலையும்</u> அவன் காணிக்கையையும் ஏற்றுக் கொண்டார். (ஆதி 4:4) தேவன் <u>காயீனையும் </u>அவன் காணிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. (ஆதி 4:5) இதிலிருந்து நாம் அறிந்து கொள்கிற மிக முக்கியமான காரியம் என்னவென்றால் தேவன் காணிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக அதை படைக்கிற மனிதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே தேவ நியதி.....

**ஏன் தேவன் ஆபேலையும் அவன் காணிக்கையையும் ஏற்றுக் கொண்டார்?**

1. அவனுடைய தனிப்பட்ட வாழ்க்கை தேவனை பிரியப்படுத்தினது. பரிசுத்த வேதாகமத்தில் பல இடங்களில் ஆபேலைக் குறித்து தேவன் வெளிப்படுத்திருக்கிறார் அதை சற்று உற்று கவனிப்போமானால் நமக்கு அது மிகவும் பிரயோஜனமாக இருக்கும்

முதலாவது அவனுக்கு விசுவாசம் இருந்தது.(எபி 11:4) விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாக இருப்பது கூடாத காரியம் விசுவாசத்தினாலே காயீனை விட மேன்மையான பலி செலுத்தினான். (விசுவாசம் என்பது நம்பப்படுகிறவர்களின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது) ஆம், அவன் கொண்டு வந்த பலியில் இரத்தம் இருந்தது. இரத்தம் பாவங்களை சுத்திகரிக்கும் என்பதை அவன் அறிந்திருந்தான்....

2. ஆபேல் நீதிமானாய் இருந்தான். மத் 23:25-ல் ஆண்டவர் தாமே அவனைக் குறித்து 'நீதிமான' என்று சாட்சியாக சொன்னார். ஆகவேதான் தேவன் அவன் காணிக்கையை அங்கீகரித்தார்.

இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

## காயீன்

ஏன் தேவன் காயீனையும் அவன் காணிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அவன் தேவனுக்கு பிரியமானவன் இல்லை..

1. பரிசுத்த வேதம் அவனைக் குறித்து சொல்கிறது....காயீன் பொல்லாங்கனால் உடையவனாயிருந்தான்.(1யோவான் 3:12) அப்படி என்றால் பிசாசின் ஆளுகைக்குள்ளிருந்தான்.

2. அவன் வழியும் தேவன் விரும்பின நல்ல வழி அல்ல என்று யூதா 1:11ல் வாசிக்கிறோம்.

3. காயீன் நன்மை செய்யவில்லை என்று ஆதி 4:7 ல் வாசிக்கிறோம்

4. பாவத்தோடு தொடர்பு உண்டு. (ஆதி 4:7)

இப்பொழுது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்...

தேவன் முதலாவது நம்மை ஏற்றுக்கொள்ளவேண்டும். பிற்பாடு நாம் படைக்கும் காணிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.... நம்முடைய ஆண்டவர் நம்மை ஏற்றுக்கொண்டுவிட்டாரா? யோசிப்போம்.. நாம் படைக்கும் காணிக்கைகள் ஒருவேளை ஊழியக்காரர்களை பிரியப்படுத்தலாம். ஆனால் தேவனை பிரியப்படுத்தாது. தேவனை பிரியப்படுத்துவது நம்முடைய காணிக்கையல்ல மாறாக நம்முடைய வாழ்க்கையே...

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார் ஆமென்.